| O.S.No. 180/2023 | DW2: திரு. நாராயணமூர்த்தி<br>த/பெ. திரு. தட்சிணாமூர்த்தி | 02-09-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் மற்றும் 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வழக்கு சொத்தினை வாதிகள், பிரதிவாதிகள் மற்றும் ஒரு முனுசாமி சேர்ந்து 2013-ல் 92 சென்ட் நிலமாக கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேல்பக்கம் ஏரி கால்வாய் உள்ளது. வழக்கு சொத்திற்கு கிழக்கே செல்வபாண்டியன் நிலம் உள்ளது. வழக்கு சொத்திற்கு தெற்கே ஏகாம்பரம் என்பவர் மனைப்பிரிவுகளாக போட்டுள்ளார். வழக்கு சொத்திற்கு அருகே மனைப்பிரிவுகள் போட்டுள்ளார்கள் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் போட்டுள்ளீர்களா என்றால் போட்டுள்ளேன். வழக்கு சொத்திற்கு பக்கத்தில் மனைப்பிரிவுகள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

2. ஒரு சொத்தினை பொதுவாக கூட்டு பாகஸ்தர்கள் சேர்ந்து கிரையம் வாங்கியதற்கு பின்னர் அதில் ஒரு பாகஸ்தர் அவரது பங்கினை கேட்டால் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். 30.06.2022 அன்று வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் எனக்கு வரவில்லை. அந்த அறிவிப்பினை பற்றி மற்ற பிரதிவாதிகளை கேட்டு தெரிந்துகொண்டீர்களா என்றால் யாரும் எனக்கு சொல்லவில்லை. 2-ம் வாதி ரவிச்சந்திரன் வக்கீல் நோட்டீஸ் வந்துவிட்டது, அதனால் நான் அனைவரும் பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று என்னிடம் சொன்னார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. வாதிகள் 16.03.2023-ல் மீண்டும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு வரவில்லை. அவ்வாறு வந்த வழக்கறிஞர் அறிவிப்பினை நான் பெற்றுக்கொண்டதற்கான வா.சா.ஆ.7 அஞ்சலக ஒப்புகை அட்டையில்

உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று சொன்னால் அது என்னுடையது அல்ல.

3. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்தும், அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான் என்றால் இல்லை. நான் அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்தினை மறுத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை மனைப்பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என்று உடன்படிக்கையோ அல்லது பத்திரமோ எழுதப்பட்டதா என்றால் இல்லை, வாய்மொழியாக சொல்லிக்கொண்டோம். எனக்கு நிலம் வாங்குவது விற்பது சம்மந்தமாக அனைத்து விஷயங்களும் தெரியும். அவ்வாறு உண்மையில் மனைப்பிரிவுகளாக பிரிக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்திருந்தால் ஆவணம் எழுதியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

4. நிலம் வாங்கியதன் நோக்கமே அனைவரும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பிரித்துக்கொள்ளலாம் என்று வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல. DTCP Approval வாங்கவேண்டும் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்கள் பொய் என்று சொன்னால் சரியல்ல. ஒரு மனையை DTCP Approval இல்லாமல் பிரிக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. தனிப்பட்ட மனையை பொருத்தவரையில் DTCP Approval வாங்கி வீடு கட்டலாம் என்று சொன்னால் சரிதான். வாதிகள் வீடு கட்டும் நோக்கத்திற்காக மனையை வாங்கவில்லை என்றாலும், கார்டன் அமைத்து பயன்படுத்தலாம் என்ற நோக்கத்திற்காகத்தான் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

5. எங்களுக்கு வழக்கு சொத்தினை வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும், நாங்கள் காலம் கடத்தி வந்ததால்தான் வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்தார்கள் என்றாலும் சரியல்ல. வாதிகளுக்கு மனையினை பிரித்துக் கொடுப்பதற்கு 1, 3 முதல் 6 பிரதிவாதிகள் தயாராக உள்ளார்கள் என்றாலும், 2, 7, 8 பிரதிவாதிகளான நாங்கள்தான் மறுத்து வருகிறோம் என்றால் சரியல்ல, DTCP அங்கீகாரம் பெற்றதற்கு பிறகு மனையை பிரித்து கொடுக்க நாங்களும்ம தயாராக உள்ளோம். வழக்கு சொத்தினை உரிய முறையில் DTCP அங்கீகாரம் பெற்று மனைப்பிரிவுகளாக பிரித்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்திருந்தால் அதற்குரிய ஆவணங்கள் நாங்கள் ஏற்படுத்தியிருப்போம் என்றாலும், அவ்வாறான எண்ணம் எங்களுக்கு இல்லை என்றாலும் சரியல்ல. வாச்சா உடன்படிக்கை எங்களுக்குள் ஏற்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால், வாதிகளின் வழக்கு தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.09.02 13:34:13 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**